08.08.2025 OS.No.246/2023 DW1 Name :.**அசோகன்**

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. வாதிகளுக்கும் எனக்கும் விரோதம் எதுவும் இல்லை. நான் ஏற்கனவே வாணியம்பாடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்து பின்னர் அதை வாபஸ் பெற்றுள்ளேன் என்றால் அவ்வாறு வாபஸ் பெறவில்லை. 2ம் பிரதிவாதி பெயரில் அந்த வழக்கு போட்டது உண்மைதான். அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. வாசாஆ5 ஆவணம் நான் தாக்கல் செய்த வழக்குரை ஆகும்.
2. வாசாஆ 7 ஆவணம் தான் அந்த வழக்கின் தள்ளுபடி உத்தரவாகும். உரிமை பிரச்சனை உள்ளதால் அது தள்ளுபடி ஆகிவிட்டது. தட்சணாமூர்த்தி என்னுடைய தாய் மாமன். கவிதாவின் கணவர் அவர் ஆவார். உயில் ஆவணத்தை தாக்கல் செய்ததால் தான் அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. உயில் ஆவணம் என்னிடம் காட்டபடுவது தான் ஆனால் அது தவறானது ஆகும். அதை செல்லாது என இதுவரை வழக்கு போடாததற்கு என்ன காரணம் என்றால் இன்னும் பாகம் பிரிக்கபடவில்லை.
3. வழக்கு சொத்தில் 3 ஏக்கர் நிலம் மற்றும் கிணறு மின்மோட்டார் உள்ளது என்றால் ஆயில் பம்புசெட்டு தான் உள்ளது. மின் இணைப்பு உள்ளது. அது என் அப்பா பெயரில் உள்ளது. என் அப்பா இறந்ததற்கு பின் தான் மின் இணைப்பு கிடைத்தது. ஏற்கனவே வழக்கு போட்டு தள்ளுபடி ஆனதால் தான் நான் இந்த வழக்கில் பிரதிவாதியாக உள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பா இறக்கும்வரை தாவா சொத்தை முழுவதும் அவர்தான் பயிர் செய்து வந்தார். என் தகப்பனார்

உடல்நிலை சரியில்லாமல் இருந்ததை தான் படுத்தபடுக்கையாக இருந்தார் என கூறுகிறேன்.

4. அது தொடர்பான மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. நாங்கள் மருத்துவ செலவு மட்டும்தான் செய்தோம். ஆம்பூர் பெதஸ்தா மருத்துவனையில் செலவு செய்தோம். அங்கு மருத்துவ ஆவணங்கள் பராமரிக்கிறார்கள். ஏற்கனவே நான் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் 2ம் பிரதிவாதி தரப்பில் அசல் உயில் ஆவணத்தை தாக்கல் செய்தார்கள். என் தகப்பனார் இறந்த அடுத்த ஆண்டு நான் அந்த வழக்கை தாக்கல் செய்தேன். உயில் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சாட்சிகளுக்கும் எனக்கும் விரோதம் உள்ளது.

5. தட்சணாமூர்த்தி எங்களிடம் தகராறு செய்துள்ளார். மற்றொரு சாட்சி பெயர் தெரியவில்லை. உயில் ஆவணம் பதிவு செய்யபட்டது. எங்களுக்கு தெரியாமல் அது பதிவாகியுள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண். 1/14 ஆகும். அது உட்பிரிவு ஆகியுள்ளது என்றால் அது தெரியும் ஆனால் அது தவறாகும். அதற்கு வருவாய் துறையில் முறையீடு எதுவும் செய்யவில்லை. உரிமை பிரச்சனைக்காக நான் தனியாக வழக்கு போடவில்லை. என்னுடைய வழக்கு தொடர்பான ஆவணங்களை நான் தான் 1ம் வாதிக்கு கொடுத்துள்ளேன் என்று சொன்னால் அது பற்றி தெரியாது.

6. சர்வே எண் 1/14ஏ என்பது 2ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றும் 1/14பி மட்டும் தான் அனைவருக்கும் பங்கு உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பா கிராம உதவியாளராக இருந்தார். அதற்காக தான் வழக்கு சொத்து அவருக்கு ஒதுக்கபட்டது என்றால் சரியல்ல. அரசாங்க நிலத்தில் என் தகப்பனார் பயிர் செய்ததால்

அரசாங்கம் அவருக்கு பட்டா கொடுத்தது. என் தாயாருக்கு பாத்தியபட்ட தனி சொத்து எதுவும் இல்லை. என் தகப்பனார் மனநிலை சரியில்லை என வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. உயில் ஆவணம் உண்மையானது என்றும் அது நடைமுறைக்கு வந்துள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

7. தாவா சொத்தின் வடக்குபுறத்தை தான் என் தகப்பனார் உயில் எழுதியுள்ளார் என்றால் சரியல்ல. உயில் ஆவண தேதிக்கு பின் ஒருவருடம் கழித்து தான் என் தகப்பனார் இறந்துள்ளார். 2ம் பிரதிவாதியின் பதில் பற்றி தெரியாது. பட்டாவில் 2ம் பிரதிவாதி பெயர் உள்ளது அது பொய்யாகும். தாவாவில் கிணறு மின்இணைப்பு போன்றவை 2ம் பிரதிவாதி சொத்தில் உள்ள நிலையில் பிரச்சனை செய்வதற்காக வழக்கு போடபட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிகளை தூண்டிவிட்டு தவறான வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொதில் 2 ஏக்கர் 2ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 08/08/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.08.08 15:20:10 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.